**DEPOSITION OF WITNESS**

**In the Court of Judicial Magistrate No.II, Mettur**

**Case No : C.C. 21/2021**

**Prosecution witness : அ.சா. 1** **Date : 09.06.2023**

| | |
|---|---|
| **Name : மணியன்** | **Caste :** |
| **Father's Name :** | **Calling :** |
| **Village :** | **Religion :** |
| **Taluk :** | **Age :** |

**(Accused present. )**

சாட்சி ஆஜர். சத்தியபிரமாணம் செய்து வைக்கப்பட்டு, முதல் விசாரணை செய்ய அனுமதிக்கப்பட்டது.
(சாட்சி திறந்த நீதிமன்றத்தில் சம்மந்தப்பட்ட காவல்துறை அதிகாரியால் அடையாளம் காட்டப்பட்டு விசாரணை செய்யப்பட்டார்)

**முதல் விசாரணை**

1) நான் வைத்தியநாதபுரத்தில் குடியிருந்து கூலி வேலை செய்கிறேன். விபத்தில் இறந்தவர் எனது மகன் ஆவார். எனது மகனுக்கு திருமணம் ஆகவில்லை. எனது மகன் எலக்ரீசியன் வேலை செய்துவந்தார். கடந்த 2019–ம் வருடம் இரவு 9 மணிக்கு எனது மகன் அவரது இருசக்கர வாகனத்தில் ஓமலூர் ரோட்டில் சந்திரமா கடை பேருந்து நிறுத்தம் அருகே சென்றபோது, எதிராக வந்த தனியார் பேருந்து மோதி விபத்து ஏற்பட்டது.

2) விபத்தின் காரணமாக எனது மகன் மீது பேருந்து ஏறி தலை நசுங்கி விபத்து ஏற்பட்டது. எனக்கு தகவல் கொடுத்ததன் பேரில் நான் சம்பவயிடம் சென்றேன். பிறகு ஆம்புலன்ஸ் மூலமாக எனது மகனை ஓமலூர் அரசு மருத்துவமனையில் கொண்டு சென்று சேர்ந்தபோது, வரும் வழியிலேயே இறந்துவிட்டதாக சொன்னார்கள். இது சம்மந்தமாக நான் காவல் நிலையம் சென்று புகார்மனு கொடுத்தேன். புகார் மனுவில் உள்ள கையெழுத்து என்னுடையதான் அதில் உள்ள சங்கதிகள் எனக்கு தெரியும். புகார் மனு அ.சா.ஆ.1 ஆகும். போலிசார் என்னை விசாரித்தனர்.

**<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை–</u>**

3) சம்பவம் குறித்து எனக்கு நேரடியாக தெரியாது என்றால் சரிதான். சம்பவம் குறித்து யாருடைய கவனக்குறைவால் விபத்து ஏற்பட்டது என்று எனக்கு தெரியாது. சம்பவம் குறித்து யார் தகவல் சொன்னார்கள் என்று எனக்கு தெரியாது. புகார் யார் எழுதினார்கள் என்றால் எனக்கு தெரியாது. வெள்ளை பேப்பரில் கையொப்பம் செய்தேன் என்றால் சரிதான்.

4) போலிசார் என்னை விசாரிக்கவில்லை என்றால் சரிதான். விபத்து எனது மகனின் அஜாக்கிரதையால் நடந்தது என்றால் சரியல்ல.

மறுவிசாரணை இல்லை.

ஒம்/–தே.மயில்சாமி,
**நீதித்துறை நடுவர் எண்.2,**
**மேட்டூர்.**

**DEPOSITION OF WITNESS**

**In the Court of Judicial Magistrate No.II, Mettur**

**Case No : C.C. 21/2021**

**Prosecution witness : அ.சா. 2** **Date : 09.06.2023**

| | |
|---|---|
| **Name : பூபதி** | **Caste :** |
| **Father's Name :** | **Calling :** |
| **Village :** | **Religion :** |
| **Taluk :** | **Age :** |

**(Accused present. )**

சாட்சி ஆஜர். சத்தியபிரமாணம் செய்து வைக்கப்பட்டு, முதல் விசாரணை செய்ய அனுமதிக்கப்பட்டது.
(சாட்சி திறந்த நீதிமன்றத்தில் சம்மந்தப்பட்ட காவல்துறை அதிகாரியால் அடையாளம் காட்டப்பட்டு விசாரணை செய்யப்பட்டார்)

**முதல் விசாரணை**

1) நான் வைத்தியநாதபுரத்தில் குடியிருந்து கூலி வேலை செய்கிறேன். விபத்தில் இறந்தவர் எனது மகன் ஆவார். எனது மகனுக்கு திருமணம் ஆகவில்லை. எனது மகன் எலக்ரீசியன் வேலை செய்துவந்தார். கடந்த 2019-ம் வருடம் இரவு 9 மணிக்கு எனது மகன் அவரது இருசக்கர வாகனத்தில் ஓமலூர் ரோட்டில் சந்திரமா கடை பேருந்து நிறுத்தம் அருகே சென்றபோது, எதிராக வந்த தனியார் பேருந்து மோதி விபத்து ஏற்பட்டது.

2) விபத்தின் காரணமாக எனது மகன் மீது பேருந்து ஏறி தலை நசுங்கி விபத்து ஏற்பட்டது. எனக்கு தகவல் கொடுத்ததன் பேரில் நான் சம்பவயிடம் சென்றேன். போலிசார் என்னை விசாரித்தனர்.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை-**

3) சம்பவம் குறித்து எனக்கு நேரடியாக தெரியாது என்றால் சரிதான். சம்பவம் குறித்து யாருடைய கவனக்குறைவால் விபத்து ஏற்பட்டது என்று எனக்கு தெரியாது. சம்பவம் குறித்து யார் தகவல் சொன்னார்கள் என்று எனது கொழுந்தனார் மகன்கள் நந்தகுமார், பாலு, சிவக்குமார் ஆகியோர் சொன்னார்கள்.

4) விபத்து எனது மகனின் அஜாக்கிரதையால் நடந்தது என்றால் சரியல்ல.

சங்மபவம் நடந்த சமயத்தில் எனக்கு தகவல் சொன்ன நபர்கள் எனது வீட்டின் பக்கத்தில் இருந்தார்கள் என்றால் சரிதான். அவர்களுக்கும் வேறு நபர்தான் தகவல் சொன்னாகள் என்றால் சரிதான்.

மறுவிசாரணை இல்லை.

ஒம்/–தே.மயில்சாமி,
**நீதித்துறை நடுவர் எண்.2,**
**மேட்டூர்.**

**DEPOSITION OF WITNESS**

**In the Court of Judicial Magistrate No.II, Mettur**

**Case No : C.C. 21/2021**

**Prosecution witness : அ.சா. 3** **Date : 09.06.2023**

| Name : முத்துலிங்கம் | Caste : |
|---|---|
| Father's Name : | Calling : |
| Village : | Religion : |
| Taluk : | Age : |

**(Accused present. )**

சாட்சி ஆஜர். சத்தியபிரமாணம் செய்து வைக்கப்பட்டு, முதல் விசாரணை செய்ய அனுமதிக்கப்பட்டது.
(சாட்சி திறந்த நீதிமன்றத்தில் சம்மந்தப்பட்ட காவல்துறை அதிகாரியால் அடையாளம் காட்டப்பட்டு விசாரணை செய்யப்பட்டார்)

**முதல் விசாரணை**

1) நான் வைத்தியநாதபுரத்தில் குடியிருந்து டிரைவராக வேலை செய்கிறேன். விபத்தில் இறந்தவர் எனது தம்பி ஆவார். எனது தம்பிக்கு திருமணம் ஆகவில்லை. எனது தம்பி எலக்ரீசியன் வேலை செய்துவந்தார். கடந்த 2019-ம் வருடம் இரவு 9 மணிக்கு எனது தம்பி அவரது Star city என்ற இருசக்கர வாகனத்தில் ஓமலூர் ரோட்டில் சந்திரமா கடை பேருந்து நிறுத்தம் அருகே சென்றபோது, எதிராக வந்த ராஜம் என்ற தனியார் பேருந்து மோதி விபத்து ஏற்பட்டது.

2) விபத்தின் காரணமாக எனது தம்பி மீது பேருந்து ஏறி தலை நசுங்கி விபத்து ஏற்பட்டது. எனக்கு தகவல் கொடுத்ததன் பேரில் நான் சம்பவயிடம் சென்றேன். போலிசார் என்னை விசாரித்தனர்.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை-**

3) சம்பவம சமயத்தில் நான் ஊரில் இருந்தேன் என்றால் சரிதான். சம்பவம் குறித்து எனக்கு நேரடியாக தெரியாது என்றால் சரிதான். சம்பவம் குறித்து யாருடைய கவனக்குறைவால் விபத்து ஏற்பட்டது என்று எனக்கு தெரியாது. சம்பவம் குறித்து யார் தகவல் சொன்னார்கள் என்று நந்தகுமார், பழனிச்சாமி

ஆகியோர் சொன்னார்கள்.

4) விபத்து எனது தம்பியின் அஜாக்கிரதையால் நடந்தது என்றால் சரியல்ல.

மறுவிசாரணை இல்லை.

ஒம்/–தே.மயில்சாமி,
**நீதித்துறை நடுவர் எண்.2,**
**மேட்டூர்.**

**DEPOSITION OF WITNESS**
**In the Court of Judicial Magistrate No.II, Mettur**
**Case No : C.C. 21/2021**

**Prosecution witness : அ.சா. 4** **Date : 09.06.2023**

| Name : வினைதீர்த்தான் | Caste : |
|---|---|
| Father's Name : | Calling : |
| Village : | Religion : |
| Taluk : | Age : |

**(Accused present. )**

சாட்சி ஆஜர். சத்தியபிரமாணம் செய்து வைக்கப்பட்டு, முதல் விசாரணை செய்ய அனுமதிக்கப்பட்டது.
(சாட்சி திறந்த நீதிமன்றத்தில் சம்மந்தப்பட்ட காவல்துறை அதிகாரியால் அடையாளம் காட்டப்பட்டு விசாரணை செய்யப்பட்டார்)

**முதல் விசாரணை**

1) நான் வைத்தியநாதபுரத்தில் குடியிருந்து கூலி வேலை செய்கிறேன். விபத்தில் இறந்தவர் எனது சித்தப்பா மகன் ஆவார். எனது சித்ப்பா மகனுக்கு திருமணம் ஆகவில்லை. கடந்த 4 வருடத்திற்க முனபாக இரவு 9 மணிக்கு எனது சித்தப்பா மகன் அவரது இருசக்கர வாகனத்தில் ஓமலூர் ரோட்டில் சந்திரமா கடை பேருந்து நிறுத்தம் அருகே சென்றபோது, எதிராக வந்த ராஜம் என்ற தனியார் பேருந்து மோதி விபத்து ஏற்பட்டது.

2) விபத்தின் காரணமாக எனது சித்தப்பா மகன் மீது பேருந்து ஏறி தலை நசுங்கி விபத்து ஏற்பட்டது. எனக்கு தகவல் கொடுத்ததன் பேரில் நான் சம்பவயிடம் சென்றேன். போலிசார் என்னை விசாரித்தனர்.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை–**

3) சம்பவம் குறித்து எனக்கு நேரடியாக தெரியாது என்றால் சரிதான். சம்பவம் குறித்து யாருடைய கவனக்குறைவால் விபத்து ஏற்பட்டது என்று எனக்கு தெரியாது. விபத்து எனது சித்தப்பா மகனின் அஜாக்கிரதையால் நடந்தது என்றால் சரியல்ல.

மறுவிசாரணை இல்லை.

ஒம்/–தே.மயில்சாமி,
**நீதித்துறை நடுவர் எண்.2,**
**மேட்டூர்.**

**DEPOSITION OF WITNESS**
**In the Court of Judicial Magistrate No.II, Mettur**
**Case No : C.C. 21/2021**
**Prosecution witness : அ.சா. 5 Date : 09.06.2023**

| | |
|---|---|
| **Name : முத்துகுமார்** | **Caste :** |
| **Father's Name :** | **Calling :** |
| **Village :** | **Religion :** |
| **Taluk :** | **Age :** |

**(Accused present. )**

சாட்சி ஆஜர். சத்தியபிரமாணம் செய்து வைக்கப்பட்டு, முதல் விசாரணை செய்ய அனுமதிக்கப்பட்டது.
(சாட்சி திறந்த நீதிமன்றத்தில் சம்மந்தப்பட்ட காவல்துறை அதிகாரியால் அடையாளம் காட்டப்பட்டு விசாரணை செய்யப்பட்டார்)

**முதல் விசாரணை**

1) நான் வைத்தியநாதபுரத்தில் குடியிருந்து கைத்தறி வேலை செய்கிறேன். விபத்தில் இறந்தவர் எனது அண்ணன் மகன் ஆவார். கடந்த 4 வருடத்திற்க முனபாக இரவு 9 மணிக்கு எனது அண்ணன் மகன் அவரது இருசக்கர வாகனத்தில் ஓமலூர் ரோட்டில் சந்திரமா கடை பேருந்து நிறுத்தம் அருகே சென்றபோது, எதிராக வந்த ராஜம் என்ற தனியார் பேருந்து மோதி விபத்து ஏற்பட்டது.

2) விபத்தின் காரணமாக எனது அண்ணன் மகன் மீது பேருந்து ஏறி தலை நசுங்கி விபத்து ஏற்பட்டது. எனக்கு தகவல் கொடுத்ததன் பேரில் நான் சம்பவயிடம் சென்றேன். போலிசார் என்னை விசாரித்தனர்.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை–**

3) சம்பவம் குறித்து எனக்கு நேரடியாக தெரியாது என்றால் சரிதான். சம்பவம் குறித்து யாருடைய கவனக்குறைவால் விபத்து ஏற்பட்டது என்று எனக்கு தெரியாது. விபத்து எனது அண்ணன் மகனின் அஜாக்கிரதையால் நடந்தது என்றால் சரியல்ல.

மறுவிசாரணை இல்லை.

ஒம்/–தே.மயில்சாமி,
**நீதித்துறை நடுவர் எண்.2,**
**மேட்டூர்.**

**DEPOSITION OF WITNESS**

**In the Court of Judicial Magistrate No.II, Mettur**

**Case No : C.C. 21/2021**

**Prosecution witness : அ.சா. 6** **Date : 09.06.2023**

| | |
|---|---|
| **Name : தினகரன்** | **Caste :** |
| **Father's Name :** | **Calling :** |
| **Village :** | **Religion :** |
| **Taluk :** | **Age :** |

**(Accused present. )**

சாட்சி ஆஜர். சத்தியபிரமாணம் செய்து வைக்கப்பட்டு, முதல் விசாரணை செய்ய அனுமதிக்கப்பட்டது.
(சாட்சி திறந்த நீதிமன்றத்தில் சம்மந்தப்பட்ட காவல்துறை அதிகாரியால் அடையாளம் காட்டப்பட்டு விசாரணை செய்யப்பட்டார்)

**முதல் விசாரணை**

1) நான் மேச்சேரியில் குடியிருந்து தக்காளி வியாபாரம் வேலை செய்கிறேன். நான் முதலில் பேருந்தில் நடத்துனராக பயிற்சி பெற்றேன். விபத்து சமயத்தில் சந்திரமா கடை பேருந்து நிறுத்தம் அருகே உள்ள சிக்கன் ரைஸ் கடையில் சிக்கன் சாப்பிட்டுக்கொண்டிருந்தேன். கடந்த 4 ஆண்டுகளுக்கு முன்பாக இரவு 08.50 மணிக்கு விபத்தில் இறந்தவர் இருசக்கர வாகனத்தில் ஓமலூர் நோக்கி சென்றுகொண்டிருந்தபோது, எதிரே வந்த ராஜம் பேருந்து மோதி விபத்தை ஏற்படுத்தியது.

2) விபத்தின் காரணமாக இறந்தவர் மீது பேருந்து ஏறி உடல் நசுங்கி விபத்து ஏற்பட்டது. பிறகு தனியார் ஆம்புலன்ஸ் மூலமாக ஓமலூர் அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தோம். பேருந்து ஓட்டுநரை தெரியுமா என்றால் தெரியும் ஆனால் அடையாளம் தற்பொழுது நினைவில்லை. (ஆஜர் எதிரி நீதிமன்றத்தில் இருந்தபோதும் சாட்சி அடையாளம் காட்டவில்லை) போலிசார் என்னை விசாரித்தனர்.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை–**

3) இந்த விபத்து எப்படி நடந்தது என்பது நேரடியாக தெரியாது என்றால் நான்

சத்தம் கேட்டபிறகு தான் பார்த்தேன். சத்தம் கேட்டால்தான என்னுடைய கவனமே திரும்பும். நான் மட்டுமே சிக்கன் ரைஸ் சாப்பிட்டேன். வேறு யாரும் இல்லை. சம்பவம் நடந்த இடத்தில் வேகத்தடை உள்ளது என்றால் சரிதான்.

4) இருசக்கர வானத்தை ஓட்டியவரின் அஜாக்கிரதையால் விபத்து நடந்தது என்றால் சரியல்ல. எந்த திசையிலிருந்து நான் சம்பவத்தை பார்த்தேன் என்றால் தெற்கு பகுதியில் இருந்து பார்த்தேன். நான் போலிசார் விசாரிக்கும் போதும் பேருந்து ஓட்டுநரை அடையாளம் தெரியாது என்று சொன்னேன் என்றால் சரிதான்.

மறுவிசாரணை இல்லை.

ஒம்/–தே.மயில்சாமி,

**நீதித்துறை நடுவர் எண்.2,**

**மேட்டூர்.**

**DEPOSITION OF WITNESS**

**In the Court of Judicial Magistrate No.II, Mettur**

**Case No : C.C. 21/2021**

**Prosecution witness : அ.சா. 7** **Date : 09.06.2023**

| Name : செல்லமுத்து | Caste : |
|---|---|
| Father's Name : | Calling : |
| Village : | Religion : |
| Taluk : | Age : |

**(Accused present. )**

சாட்சி ஆஜர். சத்தியபிரமாணம் செய்து வைக்கப்பட்டு, முதல் விசாரணை செய்ய அனுமதிக்கப்பட்டது.
(சாட்சி திறந்த நீதிமன்றத்தில் சம்மந்தப்பட்ட காவல்துறை அதிகாரியால் அடையாளம் காட்டப்பட்டு விசாரணை செய்யப்பட்டார்)

**முதல் விசாரணை**

1) நான் வைத்தியநாதபுரத்தில் குடியிருந்து கேபிள் வேலை செய்கிறேன். விபத்தில் இறந்தவர் எனது அண்ணன் மகன் ஆவார். கடந்த 4 வருடத்திற்க முனபாக இரவு 9 மணிக்கு எனது அண்ணன் மகன் அவரது இருசக்கர வாகனத்தில் ஓமலூர் ரோட்டில் சந்திரமா கடை பேருந்து நிறுத்தம் அருகே சென்றபோது, எதிராக வந்த ராஜம் என்ற தனியார் பேருந்து மோதி விபத்து ஏற்பட்டதாக சொன்னார்கள். என்னிடம் காட்டப்படும் பார்வை மகஜரில் உள்ள 1வது கையெழுத்து என்னுடையது தானா என்றால் நினைவில்லை. அதில் உள்ள சங்கதிகள் எனக்கு தெரியாது. சம்பவம் குறித்து போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**சாட்சியம் அரசு தரப்பிற்கு ஆதரவாக சாட்சியம் அளிக்காத நிலையில், பிறழ் சாட்சியாக பாவிக்கக் கோரி, அரசு தரப்பில் கேட்கப்பட்டு அனுமதிக்கப்பட்டு சாட்சி பிறழ் சாட்சி என அறிவிக்கப்பட்டு அரசு தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார்.**

**அரசு தரப்பில் குறுக்கு விசாரணை–**

2) கடந்த 04.02.2019 ம் தேதி காலை 10.00 மணிக்கு நான் மற்றும் ராஜேந்திரன்

இருவரும் நின்று கொண்டு இருந்த போது காவல் துறையினர் வரைந்த வரைபடத்திற்கு மகஜர் சாட்சியாக இருக்க கேட்டுக்கொண்டதன் பேரில் சாட்சியாக கையொப்பம் செய்தேனா என்றால் இல்லை,

3) சம்பவ இடமான சந்திரமா கடை பேருந்து நிறுத்தம் முன்பு வரைந்த வரைபடத்திற்கு சாட்சியாக இருந்து விட்டு தற்போது எதிரியை இந்த வழக்கிலிருந்து காப்பாற்ற உண்மைக்கு மாறாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை –இல்லை

ஒம்/–தே.மயில்சாமி,
**நீதித்துறை நடுவர் எண்.2,**
**மேட்டூர்.**